**ONE TWO ACADEMY**

**10 - ஆம் வகுப்பு**

**தமிழ்**

**இயல் - 6**

**மதிப்பெண்கள்:-50** **கால அளவு: 1.30 மணி நேரம்**

I சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **10 x 1 = 10**

1. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் .............
   அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்
   ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
   இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்
   ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

2. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?
   அ) அள்ளி முகர்ந்தால். ஆ) தளரப் பிணைத்தால்.
   இ) இறுக்கி முடிச்சிட்டால். ஈ) காம்பு முறிந்தால்.

3. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
   அ) நல்ல உள்ள ம் உடையவர்கள் இல்லாததால்
   ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
   இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
   ஈ) அங்கு வறுமை இல்லாததால்

4. முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுதினைத் தேர்ந்தெடு.
   அ) கார்காலம் ஆ) குளிர்காலம்
   இ) முன்பனி ஈ) பின்பனி

5. பொழுது எத்தனை வகைப்படும்?
   அ) இரு ஆ) மூன்று
   இ) நான்கு ஈ) ஆறு

6. கம்பர் இராமாயணத்திற்கு இட்ட பெயர் எது?
   அ) இராமகாதை ஆ) இராமாயணம்
   இ) கம்பராமாயணம் ஈ) இராமாவதாரம்

7. ‘கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்’ என்று பெருமைப்படுபவர் ..............
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) கண்ண தாசன் ஈ) கம்பதாசன்

8. “நீரற வறியாக் கரகத்து” என்ற பாடலடியில் கரகம் என்ற சொல் இடம்பெறும் நூல் ......................
அ) அகநானூறு ஆ) புறநானூறு
இ) கலித்தொகை ஈ) நற்றிணை

9. பாய்ச்சல் என்னும் சிறுகதை எந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது?
அ) சா. கந்தசாமியின் கதைகள்
ஆ) தக்கையின் மீது நான்கு கண்கள்
இ) சுடுமண் சிலைகள்
ஈ) தொலைந்து போனவர்கள்

**10.**தற்காலத்தி பாய்ச்சல் கதையில் இடம் பெறுபவர் .................
அ) அனுமார் ஆ) இராமன்
இ) வாலி ஈ) இராவணன்

II எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் **8 X 2 = 16**

11. தஞ்சம் எளியர் பகைக்கு - இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளை யும் எழுதுக.

12. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளிநகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?

13.காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச்சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.

14. உறங்குகின்ற கும்பகன்ன ’எழுந்திராய் எழுந்திராய்’
காலதூதர் கையிலே ’உறங்குவாய் உறங்குவாய்’
கும்பகன்னனை என்ன சொ ல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

**15.கீழ்வரும் தொ டர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.**

உழவர்கள் மலையில் உழுதனர். முல்லைப் பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

**16.அகராதியில் காண்க.**

அ) உழுவை, ஆ) அணிமை

**17.தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.**

1. வானம் ............ தொடங்கியது. மழைவரும்போலிருக்கிறது.
2. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் ..................

**18.கலைச்சொல் அறிவோம்:**


அ) Terminology – ஆ) Myth –

**19.தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.**

ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக் கட்டிக்கொண்டு, காலில் சலங்கை அணிந்துகொண்டு, கையில் ஒரு சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.

**(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக.)**

**20.காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**III எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 2 X 4 = 8**

21.வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங் கீரை ஆடிய நயத்தை விளக்குக

22.வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

23.தேவர் அனையர் கயவர் அவரும்தாம்

மேவன செய்தொழுக லான்.- இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

**IV எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

24.நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் -அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழைமையும் -இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்யவேண்டுவன - இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.

25.நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்ம லாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக."

**V எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

26.உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.கட்டுரை எழுதுக.

27. சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக. அன்பும் பண்பும் குணச்சித்திரமும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொகுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலை நிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி… தண்டலை மயில்கள் ஆட…

இவ்வுரையைத் தொடர்க.